செய்தி வெளியீடு எண் : 468 நாள்: 25.03.2022

## செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு துறைகளில் தமிழகத்தில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து ஐக்கிய அரபு அமீரகத்தின் அமைச்சர்களை சந்தித்து ஆலோசனை – துபாய் உலக கண்காட்சியின் இந்திய அரங்கில் தமிழ்நாடு அரங்கினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஐக்கிய அரபு நாடுகளைச் சேர்ந்த துபாயில் நடைபெறும் உலக கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரங்கினை துவக்கி வைப்பதற்காகவும், தமிழ்நாடு மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையே பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும், மார்ச் 24, 2022 முதல் மார்ச் 28, 2022 வரையிலான 5 நாட்கள் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளார்கள்.

இன்று (25.3.2022) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள்:–

### ஐக்கிய அரபு நாட்டு அமைச்சர்களுடன் சந்திப்பு:

ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதார அமைச்சர் மாண்புமிகு அப்துல்லா பின் டூக் அல் மர்ரி அவர்களுடனும், ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளிநாட்டு வர்த்தகத் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் தானி பின் அகமது அல் சியோதி அவர்களுடனும் சந்திப்புகள் நடைபெற்றன.

இந்த சந்திப்பின்போது, ஐக்கிய அரபு நாடுகளின் பொருளாதார அமைச்சர் அவர்கள், இந்தியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளிடையே உள்ள விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (CEPA) பற்றிக் குறிப்பிட்டு, இந்த ஒப்பந்தம் மூலம், தமிழ்நாடு மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு பல வாய்ப்புகளும் சாத்தியக்கூறுகளும் உள்ளதாகவும், இதன்மூலம் இரு நாடுகளுக்கிடையே, வர்த்தகமும் வாணிகமும் மேம்பட வாய்ப்புகள் ஏராளமாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

மேலும், மே மாதத்தில், ஒரு வணிக வர்த்தகக் குழுவுடன் மும்பாய் மற்றும் புது தில்லி ஆகிய நகரங்களுக்கு வர விருப்பதாகவும், அச்சமயத்தில், தமிழ்நாட்டில் இருந்து ஒரு வணிக வர்த்தகக் குழு அங்கு வந்து அவரை சந்திக்கலாம் என்றும் கூறினார்.

இந்த சந்திப்புகளின் போது, ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே உள்ள வர்த்தக உறவுகளை மேம்படுத்துதல், புத்தாக்கம் மற்றும் புத்தொழில்கள், தொழில் சூழலை மேம்படுத்துதல், விவசாயம், உணவு பதப்படுத்துதல், ஜவுளி மற்றும் ஆடைகள், நகை மற்றும் விலையுயர்ந்த கற்கள், மின்வாகனங்கள், மின்னணுவியல், மோட்டார் வாகனம் மற்றும் வாகன உதிரி பாகங்கள், பொறியியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற துறைகளில் இணைந்து பணியாற்றி முதலீடுகள் மேற்கொள்வதன் மூலம் தமிழ்நாட்டிற்கும், ஐக்கிய அரபு நாடுகளுக்கும் இடையே உள்ள

பொருளாதாரம் மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

**<u>தமிழ்நாடு அரங்கு திறப்பு விழா:</u>**

உலக கண்காட்சியில், இந்திய அரங்கில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரங்கினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (25.3.2022) திறந்து வைத்தார்கள். தமிழ்நாடு அரங்கினை திறந்து வைக்க வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஐக்கிய அரபு அமீரக வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்கள்.

இந்த திறப்பு விழாவின்போது, ஐக்கிய அரபு அமீரகத்தின் சகிப்புத்தன்மைத் துறை அமைச்சர் / துபாய் உலக கண்காட்சியின் ஆணையர் மாண்புமிகு ஷேக் நஹ்யான் பின் முபாரக் அல் நஹ்யான் அவர்கள் உடனிருந்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரங்கினை திறந்து வைத்து பேசியதாவது:

உலகத்தரத்திலான இந்த எக்ஸ்போ கண்காட்சியை நடத்தி வரும் துபாய் அரசுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நாட்டின் தரத்துக்கும் திறத்துக்கும் இந்த நிகழ்வின் வெற்றியே சான்றாக அமைந்திருக்கிறது.

இந்தக் கண்காட்சியின் இந்திய அரங்கில் 'தமிழ்நாடு வாரத்தைத்' தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முக்கியமான வளர்ந்து வரும் துறைகளில் எங்கள் மாநிலத்தின் ஆற்றலை

வெளிப்படுத்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இந்த எக்ஸ்போ கண்காட்சி அமைந்துள்ளது. உற்பத்தித் துறையில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட பலவகைப் பொருட்களும் இந்த அரங்கில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சுற்றுலா, மருத்துவம், கலை – பண்பாடு ஆகிய துறைகளோடு, தொழிற்பூங்காக்கள் மற்றும் கவனம் செலுத்த வேண்டிய துறைகள் பற்றிய தகவல்கள் ஆகியவையும் நாள் முழுதும் இங்குப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கை யார் பார்வையிட்டாலும், தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் சாதித்துள்ள ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பற்றிய புரிதலை அவர்களுக்கு இந்த அரங்கு வழங்கும்.

இந்தியத் தூதரகத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த துபாய் எக்ஸ்போ மற்றும் அதில் இடம்பெற்றுள்ள இந்திய அரங்கின் அமைப்பாளர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது பாராட்டுகளை, வாழ்த்துக்களைக் கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி.

இந்த கண்காட்சியில், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் உருவகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாட்டின் சுற்றுலா, மருத்துவம் மற்றும் சுகாதார பாதுகாப்பு, கலை மற்றும் கலாச்சாரம், தொழில் பூங்காக்கள் மற்றும் முக்கிய துறைகள் பற்றிய தகவல்கள் இருபத்தி நான்கு மணி நேரமும் ஒளிபரப்பப்பட உள்ளன. இந்த அரங்கினைப் பார்வையிடும் அனைவரும், தமிழகத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியை நன்கு புரிந்து கொள்ளும் வகையில், இந்த அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரங்கில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, பேசியதாவது:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய தமிழ் வணக்கம்.

துபாயில் நடைபெறக்கூடிய இந்தச் சிறப்புக்குரிய கண்காட்சியில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்று முதல் முறையாக இந்த துபாய்க்கு வருவதில் அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன். எப்படி உலகத்தில் இருக்கக்கூடிய எந்தப் பகுதிகளாக இருந்தாலும், எந்த நாடுகளாக இருந்தாலும், அங்கு இருக்கக்கூடிய தமிழர்களுக்கு நம்முடைய தமிழக அரசு குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறதோ, பாதுகாப்பாக இருக்கிறதோ, அது தொடர்ந்து நடைபெறும். எனவே ஒன்றிணைந்து வேற்றுமையிலே ஒற்றுமை காணவேண்டிய நிலையில் இந்தச் சிறப்பான கண்காட்சி நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதில் நம்முடைய தமிழ்க் கலாச்சாரத்தை, தமிழ்ப் பண்பாட்டை உணர்த்தக்கூடிய வகையில் இந்த கலை நிகழ்ச்சி நடத்தியிருக்கக்கூடிய அந்தக் கலைஞர்களுக்கெல்லாம் மீண்டும், மீண்டும் என்னுடைய தமிழ் வணக்கத்தைத் தெரிவித்து, உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி, நன்றி என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

தமிழ்நாடு அரங்கைத் திறந்து வைத்த பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆலிஃப் மற்றும் சவுதி அரேபியா அரங்குகளை பார்வையிட்டார்.

இந்த நிகழ்வுகளின் போது, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பூஜா குல்கர்ணி, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசின் உயர் அலுவலர்கள், ஐக்கிய அரபு அமீரகத்திற்கான உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in